

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து** : பங்குகள்: நமது பங்குகள், மறைபரப்பும் ஆவியால் உந்தப்பட்டு, விசுவாசம் பரப்பப்பட்டு, தர்மம் காணப்படும் இடங்களாக வேண்டுமென்று

**செப்டம்பர் மாத கரு** : சுய உருமாற்றம்

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| செப் 10 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு |
| செப் 11 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| செப் 14 வியா | மாலை 6.30 | திருப்பலி (த) | திருச்சிலுவையின் மகிமை |
| செப் 15 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | வியாகுல அன்னை |
| செப் 16 சனி | காலை 6.30<br>மாலை 4.30 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (ஆ) | புனித கொர்னலியுஸ் சிப்பிரியான்<br>25-ஆம் ஆண்டு திருமண நிறைவு |
| செப் 17 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| **செப் 10~16** | **மாலை 7.30** | **புலூமாதே** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| செப் 10 ஞா | காலை 11.00<br>மாலை 6.00 | பெர். மை 1-3<br>பெர். மை 1-3 | சிறார்களுக்கான இறைவார்த்தை குழு கூட்டம்<br>புலூமா மகளிர் குழு கூட்டம் |
| செப் 12 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மையம் | பங்கு பரிந்துரை குழு<br>பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| செப் 14 வியா | மாலை 7.00<br>மாலை 7.30 | ஆலயம்<br>பெர். மை 2-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA |
| செப் 16 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| செப் 17 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 6.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மை 1-3 | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>தமிழ் கலாச்சாரக் குழு கூட்டம் |

**27 ஆக ~ 10 செப் 2017 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 17 செப் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.**

<u>அக்டோபர் மாத திருமணம் 2017</u>

அக் 7 காலை 11.00 சடங்கு (த) கலை செல்வன் த/பெ சிங்காரம் & ஜெசிந்தா த/பெ சாலிஸ்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. தந்தை ரோபின் என்ட்ரூஸ் 80ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்:** தந்தை ரோபின் என்ட்ரூஸ் 80ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் 17/9/2017(ஞா) மதியம் 12.30க்கு Ipoh, sun Lee How Fook Restaurant-ல் நடைபெறும். வந்து கலந்துக்கொள்ளவும். டிக்கெட் @ ரிம 600/- & ரிம 500/- ஒரு மேசைக்கு இப்போது கிடைக்கும். தயவுசெய்து மேல் தகவல்களுக்கு ஏற்பாட்டு குழுவை தொடர்புக் கொள்ளவும். 1) ஸ்டீபன் kk Ng: 012-5015693 / ஜூட் குவா: 012-5060935/ ஜோசப்பின் லிம் - 012-5025567

**2. பெற்றோர் ஆதரவுக் குழு:** மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்பு ஆசீர்வாதங்களும், குணமளிப்பு திருப்பலியும் 23/9/17 @ காலை 9.00க்கு(சனி) நடைபெறும். சிறப்பு குழந்தைகளும், பெற்றோர்களும் (குடும்பங்கள்) இந்த திருப்பலியில் கலந்துக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**3. செபமாலை:** 13 செப் 2017 (புதன்) மாலை 8.00க்கு புனித செபஸ்தியார் சிற்றாலயத்தில் செபமாலை நடைபெறும்.

**4. பத்து காஜா, புனித ஜோசப் பழைய பள்ளிக்கூடம் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு:** நிதி திரட்டும் இரவு உணவு 7/10/17 @ மாலை 7.30க்கு புனித ஜோசப் மையம், பத்து காஜாவில் நடைபெறும். ஒரு டிக்கெட்டின் விலை ரிம 50/- நமது பங்கில் 17/9/17 (ஞாயிறு) திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். நன்கொடைகளும் அன்றைய தினத்தில் வரவேற்கப்படுகின்றன. அல்லது பத்து காஜா, புனித ஜோசப் ஆலயத்திற்கு இணையம் வழியாக வங்கியில் செலுத்தலாம். Maybank A/C: 008113310147.

**5. பெற்றோர்களுக்கான நேரம்:** 7 வயது முதல் 12 வயது பிள்ளைகளுடைய பெற்றோர்களுக்கு ஒரு பெற்றோரியல் நேரம் அருள் தந்தை சைமன் ஆனந்த் அவர்களால் நடத்தப்படும். அனைத்து பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறீர்கள். **நாள்**: 17 செப் 2017 (ஞாயிறு) **நேரம்**: காலை 10.30 ~ நண்பகல் 12.30 வரை **இடம்**: பங்கு மண்டபம்

**6. குடியேற்றவாசிகள் ஞாயிறு 2017:** "சிறார் குடியேறிகள், பாதிக்கப்படத்தக்கவர்கள் மற்றும் குரலெழுப்ப முடியாதோர்." நாள்: 24/9/17 (ஞாயிறு) நேரம்: காலை 9.00 இடம்: புலூமாதே, ஈப்போ. வீட்டுப்பணியாளர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கும் பங்கு மக்கள், தங்களுடன் தங்களின் உதவியாளர்களையும், குறிப்பாக, சிறார்களை இக்கொண்டாட்டத்திற்கு கொண்டு வர அழைக்கப்படுகிறீர்கள். வாருங்கள், கிறிஸ்துவில் நம் சகோதர, சகோதரிகளான இவர்களை நம் சமுதாயத்தில் வரவேற்போம். மேல் விபரங்களுக்கு பங்கு குடியேற்றவாசிகள் பணிக்குழுவை தொடர்பு கொள்ளவும்.

**7. ஒரு முறை இழந்தது; எப்போதும் இழந்தது!** : ஆலயத்தின் உள்ளே அல்லது ஆலயத்தின் வெளிப்புறத்திலோ அல்லது உங்கள் வாகனங்களிலோ உங்கள் தனிப்பட்ட உடைமைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் வாகனங்கள் பூட்டப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் தலை கவசம்(Helmets) உள்பட உங்கள் விலைமதிப்பற்ற பொருட்களை விட்டுவிடாதீர்கள். உங்களின் அலட்சியத்திற்கு ஆலயம் பொறுப்பேற்காது.

**8. பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2017**: நாள்: 29 அக் 2017 (ஞாயிறு) நேரம்: மதியம் 12.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம். பமேப குழுவால் நியமிக்கப்பட்ட அனைத்து அதிச மற்றும் பணிக்குழுக்கள் மற்றும் அனைத்து தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த பங்கு மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறீர்கள். அழைப்பிதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அழைப்பிதலை பூர்த்தி செய்து 12 செப் 2017க்கு முன்பாக பங்கு அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**9. பங்கு திட்டமிடுதல் 2018**: அடுத்த வருடத்திற்கான நமது பங்கு கருத்து: **கருணை & தன்னலமற்ற சேவை.** அனைத்து பங்கு பணிக்குழுக்கள் மற்றும் அதிச தயவு செய்து பங்கு கருத்தையொட்டியதாக உங்களது நிகழ்வையும், செயல்பாடுகளையும் திட்டமிடுங்கள். அனைத்து திட்டங்களும் 30/9/17க்கு முன்பாக பங்கு அலுவலகத்தில் சமர்பிக்கவும். தலைவர்கள் அவர்களின் திட்டங்களை சமர்பிக்கும் முன்பு பங்கு குருவானவரை சந்திக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**10. தயவு செய்து திருவழிப்பாட்டு நல்லொழுக்கத்தை கடைப்பிடியுங்கள்**: திருவழிப்பாட்டு கொண்டாட்டத்தில் மரியாதை குறைவாக நடப்பதை பார்க்கும் போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆலயத்தில் சிலர் இன்னும் கைப்பேசியை பயன்படுத்துகின்றனர். சிலர் நற்கருணை வழிப்பாட்டின் போது நடந்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் நற்கருணையை பெறும்போது "ஆமென்" என்றும் சொல்வதில்லை. சிலர் எடுத்துக்கொண்டு நடக்கின்றனர் ஆனால் உண்ணுவதில்லை. ஆலயத்தில் நாம் புனிதமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்.

**11. ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2:** அனைவருக்குமானது! நான்கு உற்சாகமான, பாடத்தொகுதிகள்: வத்திக்கான் சங்கம் II, திருச்சபை வரலாறு, மறைப்பணி இறையியல், மற்றும் நன்னெறி இறையியல். 14/10/17 தொடங்குகிறது. விரிவுரைகள் மாதத்தில் இரு சனிக்கிழமைகளில் நடைபெறும். (காலை 9.00 ~ மதியம் 1.00 வரை) இடம்: புலூமாதே, சிலிபின், ஈப்போ. கட்டணம்: ரிம 400/- @ ஒரு பாடம் ரிம 100/- பங்கேற்பாளர்கள் ஒரு பாடத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப பணம் செலுத்தலாம். எல்லா நான்கு பாடங்களையும் முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். கையேடுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது http://www.pdpinstitute.org. தொடர்புக்கு: 04-2611350 (திங்~வெள் அலுவலக நேரம்)

**12. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். ஒருவேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**13. தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்தால் தம்பூன் கல்லறையில் பயன்பாட்டை நீட்டிக்கலாம். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஆகஸ்டு 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **341,489.15** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **343,049.88** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**03/09/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 765.20 **காலை 9.00** - RM 1,467.00 **மொத்தம்** - RM 2,232.20

**2017** - RM 265.00 **ஏழைகளுக்கு**- RM 2,234.70

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்